### கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் அதிகரித்து வரும்


# கஞ்சா, போதைப் பொருட்களை முழுமையாக ஒழித்திட வேண்டும்!

## மாவட்டக் கழகச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. குற்றச்சாட்டு!

கள்ளக்குறிச்சி, ஆக.19-

கள்ளக்குறிச்சி மாவட்டத்திலுள்ள பல அதிகாரிகள் போதை பொருள் விற்பனைக்கு துணையாக உள்ளனர் என மாவட்ட கழக செயலாளர், ரிஷி வந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க. கார்த்திகேயன் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பேசினார்.

கோயம்புத்தூரில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தை சேர்ந்த மாணவர் அமுதன் கொலை செய்யப்பட்டதை கண்டித்து, ஒருங்கிணைந்த தி.மு.க சார்பில் கள்ளக்குறிச்சியில் கண்டன ஆர்ப்பாட்டம் ஆகஸ்ட் 16 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற்றது. அந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. பேசியதாவது:



கோயம்புத்தூர் மட்டுமின்றி தமிழகம் முழுவதும் கஞ்சா விற்பனை அதிகமாக உள்ளது. இந்த செய்தி தெரிந்ததும் கவன ஈர்ப்பு தீர்மானத்தை சபாநாயகரிடம் அளித்து, அவசரமாக எடுத்துக்கொண்டு அவையை ஒத்தி வைக்க வேண்டும் என கடந்த வியாழக்கிழமை அன்று தெரிவித்தேன், அவையை ஒத்தி வைக்காமல் மூன்று நாட்கள் அவகாசம் கேட்டு நேற்று திங்கள்கிழமை எடுத்துக் கொள்வதாக தெரிவித்தனர், இந்த நிலையில் அமுதனின் பெற்றோர்களை மிரட்டி சடலத்தை அனுப்பியுள்ளனர்.

த.வெ.க., ஆட்சி வந்ததும் போதைப் பொருட்கள் ஒழிக்கப்படும், சட்டம், ஒழுங்கு நிலை நாட்டப்படும். எதிலும் வெளிப்படைத்தன்மை இருக்கும் என கூறிய சோபா மாடல் முதல்வர் ஜோசப் விஜய், தற்போது எங்கே இருக்கிறார். தி.மு.க., ஆட்சியில் எது நடந்தாலும், எந்த செய்தி சட்டசபையில் தெரிவித்தாலும் அடுத்த சில நிமிடங்களில் முதல்வர் பதில் தெரிவிப்பார், ஆனால் மாணவர் அமுதன் கொலை சம்பவத்தில் இது வரை பதில் கூறவில்லை, கடந்த 100 நாட்களில் 36 மாணவர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். தமிழகத்தில் கஞ்சா, கள்ளச்சாரம் உள்ளிட்ட போதைப்பொருட்கள் பயன்பாடு தலைவிரித்தாடுகிறது. கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள பல அதிகாரி போதைப்பொருள் விற்பனைக்கு துணையாக உள்ளனர் என வசந்தம் க. கார்த்திகேயன் எம்எல்ஏ பேசினார்.

# கர்நாடக மாநில நிர்வாகத்தில் தமிழ்நாடு தலையிடக்கூடாது!

## 3 தமிழர்கள் கொலை விவகாரத்தில் – முதல்வர் டி.கே.சிவகுமார் ஆணவ பதில்!

பெங்களூரு, ஆக.19-

“எந்த மாநிலமும் மற்ற மாநிலத்தின் நிர்வாக விஷயத்தில் தலையிடக் கூடாது,” என்று கர்நாடக முதல்வர் டி.கே. சிவகுமார் வலியுறுத்தியுள்ளார்.

பெங்களூருவில் செய்தியாளர்களிடம் பேசிய டி.கே.சிவகுமாரிடம், கர்நாடக வனத்துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூடு குறித்து தமிழக தலைவர்கள் வெளியிட்ட கருத்துகள் பற்றி கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதில் அளித்த முதல்வர் டி.கே. சிவகுமார், “ஒரு மாநிலத்தின் நிர்வாகத்தில் மற்றொரு மாநிலம் தலையிடக் கூடாது. ஓ. பன்னீர்செல்வம் அல்லது வேறு யாராக இருந்தாலும் இந்த அடிப்படைப் புரிதலைக் கொண்டிருக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் உள்ள சட்டம்-ஒழுங்கு விவகாரங்களில் என்னால் தலையிட முடியாது. ஒவ்வொரு மாநிலத்திற்கும் அதற்கே உரிய பிரச்சினைகள் உள்ளன. நமது மாநிலத்தை எப்படிக் காப்பது என்பது நமக்குத் தெரியும் என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அவர்கள் தங்கள் பணியைச் செய்யட்டும், நாம் நமது பணியைச் செய்வோம். அவர்களின் நிர்வாகத்தில் தலையிட நான் விரும்பவில்லை. நமது மாநிலத்தின் கண்ணியத்தைக் காக்க வேண்டியது அவசியம். அவர்கள் தங்கள் பணியைச் செய்ய வேண்டும்; நாம் நமது பணியைச் செய்ய வேண்டும்.” என்று தெரிவித்தார்.

கர்நாடக மாநிலம் சாம்ராஜநகர் மாவட்டம் ஹனூர் அருகேயுள்ள காவிரி வனவிலங்கு சரணாலய பகுதியில் கடந்த 15-ம் தேதி அதிகாலையில் மானை வேட்டையாடியதாக அந்தோணிசாமி (50), ஜான்ரோஸ் பீட்டர் (42), லாசர் குமார் (33) ஆகிய மூவரும் அம்மாநில வனத்துறையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதை தொடர்ந்து, வனத்துறை அலுவலகங்கள் சூறையாடப்பட்டன.

கர்நாடக வனப்பகுதியில் சுட்டுக்கொல்லப்பட்ட 3 தமிழர்களின் உடல்களும் இறுதி திருப்பலிக்கு பின்னர், அவர்களின் சொந்த கிராமங்களில் நேற்று அடக்கம் செய்யப்பட்டன.

இந்த சம்பவம் குறித்து தமிழக அரசியல் தலைவர்கள் பலரும் கடும் கண்டனம் தெரிவித்திருந்தனர். இந்த விவகாரம் தொடர்பாக தமிழ்நாடு அரசு, கர்நாடக அரசிடம் விளக்கம் கேட்க வேண்டும் என்றும், இந்த விவகாரம் குறித்து சிபிஐ விசாரணைக்கு உத்தரவிடப் பட வேண்டும் என்றும் வலியுறுத்தினர். இந்நிலையில், இதற்கு பதில் அளிக்கும் விதமாக கர்நாடக முதல்வர் டி.கே.சிவகுமார் பேசியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



விளாத்திகுளம் தாலுகா, இனாம் கல்லூரணி கிராமத்தில் அரியநாச்சி அம்மன், பொன் முனியசாமி கோவில் ஆடி பொங்கல் விழாவை முன்னிட்டு, மாபெரும் மாட்டு வண்டி எல்கை பந்தயத்தினை சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்கண்டேயன் துவக்கி வைத்தார். நிகழ்வில் ஒன்றியச் செயலாளர் சின்னமாரிமுத்து, ஒன்றியச் செயலாளர் இமானுவேல்,கிளைச் செயலாளர் ராஜா,பாக முகவர் பெரியசாமிதுரை உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### எதிர்க்கட்சித் தலைவர் கேட்கிறார்!

# சட்டமன்றத்தில் சட்டம் ஒழுங்கு முதலமைச்சரைக் காணோம்!

“சட்டசபையில் அப்பாவை காணோம்” என்றீர்கள்... இன்று “சட்ட ஒழுங்கு அமைச்சரை காணோம்”

தமிழ்நாட்டின் சட்ட ஒழுங்கு தீர்வுகளும், ஆளும் தலைமையின் பொறுப்பற்ற தன்மையும்

“சட்டசபையில் அப்பாவை காணோம்” என்று சில மாதங்களுக்கு முன்பு எதிர்க்கட்சிகளை பார்து நக்கலாக பேசினீர்களே முதல்வர் அவர்களே!!!

இன்று சட்டமன்றத்தில் மிக முக்கியமான “சட்ட ஒழுங்கு” துறை குறித்த விவாதம் நடைபெறுகிறது என்று அனைவருக்கும் தெரியும். ஆனால் அந்த துறையின் அமைச்சரும், மாநிலத்தின் முதல்வருமான நீங்களே இன்று சட்டசபையில் காணவில்லை.

அப்போ கேட்டீர்கள் “அப்பாவை காணோம்”. இன்று மக்கள் கேட்கிறார்கள் “சட்ட ஒழுங்கை காக்க வேண்டியவரை காணோம்”.

பேச்சுக்கு பதில் சொல்ல பயமா? கேள்விகளுக்கு பதில் தர முடியாதா? இல்லை பொறுப்பை தட்டி கழிக்கிறீர்களா?

தமிழ்நாட்டின் எதிர்கட்சித் தலைவரும், இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரமுமான மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சட்டமன்றத்தில் ஆளும் விஜய்அரசை பார்த்து அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பி வருகிறார்.

போதை, சட்ட ஒழுங்கு, பெண்கள் பாதுகாப்பு என ஒவ்வொரு துறையாக புள்ளி விவரத்துடன் கேள்வி கேட்டு முதலமைச்சரையும் அமைச்சர்களையும் திக்கு முக்காட வைக்கிறார்.

மக்களின் குரலாக ஒலிக்கும் அவரின் கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல் ஆளுங்கட்சி திணறி வருகிறது. உதயநிதி அவர்களின் ஆக்ரோஷமான எதிர்கட்சி பணி தமிழ்நாட்டு மக்களின் பாராட்டை பெற்று வருகிறது.

கடந்த கால திமுக ஆட்சியை குறை சொல்ல எந்த வித அருகதையும் அற்றவர்கள்

5 ஆண்டுகள் திமுக ஆட்சியில் - முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் முதல்வராக இருந்தபோது எடுக்கப்பட்ட அதிரடி நடவடிக்கைகள்

**1. Supply Control**

- 107 டன்+ கஞ்சா பறிமுதல்: 2021 முதல் 2025 வரை 107 டன்களுக்கு மேல் கஞ்சா பிடிக்கப்பட்டுள்ளது
- 8,949 வங்கி கணக்குகள் முடக்கம்: போதை கடத்தல் தொடர்பான 8,949 வங்கி கணக்குகள் முடக்கப்பட்டன
- 45 சொத்துகள் பறிமுதல்: 21 கோடி மதிப்புள்ள 45 சொத்துகள் பறிக்கப்பட்டன.

**2. தடுப்பு & விழிப்புணர்வு**

- ‘எனக்கு வேண்டாம், நமக்கு வேண்டாம்’ இயக்கம்: 74 லட்சம் மாணவர்கள் போதைக்கு எதிராக உறுதிமொழி

**3. தண்டனை & தடுப்புக் காவல்**

- குற்றத்தீர்ப்பு 88%: 2025 ஜூன் வரை 4,889 வழக்குகளில் 3,493 குற்றத்தீர்ப்பு
- குண்டர் சட்டம்: ஆயிரக்கணக்கான பழக்கமான கஞ்சா விற்பவர்கள் குண்டர் சட்டத்தில் கைது
- தமிழ்நாட்டின் சட்ட ஒழுங்கு இன்று எந்த நிலையில்?

1. போதை மற்றும் கஞ்சா மாஃபியா
   பள்ளி, கல்லூரி வாசலிலேயே கஞ்சா பொட்டலம் விற்கப்படுகிறது.
2. பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு கேள்விக்குறி
   பாலியல் வன்கொடுமை, கடத்தல் அதிகரித்துள்ளது.
3. கொலை, கொள்ளை, வழிப்பறி
   பட்டப்பகலில் செயின் பறிப்பு சர்வ சாதாரணம்.



**சைதை சாதிக்**
(கழக செய்தித் தொடர்பாளர்)

4. அரசியல் வன்முறை
   கட்சி பெயரை சொல்லி மிரட்டுவது அதிகமாகிவிட்டது.
5. சைபர் குற்றம் மற்றும் நிதி மோசடி
   முதியவர்கள், பெண்கள் லட்சக்கணக்கில் ஏமாற்றப்படுகிறார்கள்.

முதல்வர் அவர்களே, எதிர்க்கட்சியை கிண்டல் செய்வது அரசியல். ஆனால் மக்கள் கொடுத்த பொறுப்பில் இருந்து ஓடி ஒளிவது அல்ல.

“சட்டசபையில் அப்பாவை காணோம்” என்று நீங்கள் கேட்டீர்கள்.

இன்று தமிழ்நாட்டு மக்கள் கேட்கிறார்கள் “சட்ட ஒழுங்கை காக்க வேண்டிய முதல்வரை காணோம்”.

பேச்சு வீரம் மட்டும் போதாது. பொறுப்புடன் சபையில் அமர்ந்து பதில் சொல்லுங்கள்.

இல்லையென்றால் நாளை “தமிழ்நாட்டில் சட்டமே இல்லை” என்ற நிலை வந்துவிடும்.

ஆட்சி என்பது நாற்காலி அல்ல, அது பொறுப்பு.



தென்காசி தெற்கு மாவட்டம் , கிழக்கு ஒன்றியம், அய்யாபுரத்தில் திமுக கிளையை 1969ல் உருவாக்கிய மு.பி.பா என்கிற மு.பி.மணிவேந்தன் அவர்களிடம் முதல் உறுப்பினராக சேர்ந்த கடப்பாலு என்கிற பாலசுப்பிரமணியன் வயது மூப்பு காரணமாக மறைந்தார். அவரது புகைப்படம் அய்யாபுரம் மு.பி.பா. நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. நேற்று தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் ஜெயபாலன் தலைமையில் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் கலை கதிரவன் ஆகியோர் அவரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். அப்போது தென்காசி கிழக்கு ஒன்றியச் செயலாளர் அழகுசுந்தரம், தி.மு.க. பிரமுகர் மு.பி.பா.அன்புச்செழியன் மற்றும் சோபியா அன்புச்செழியன், அய்யாபுரம் தி.மு.க. கிளைச் செயலாளர் செல்வக்குமார், அறங்காவலர் உறுப்பினர் சுந்தர்ராஜ் மற்றும் கழக உறுப்பினர்கள் பலர் உடனிருந்தனர்....




ஒன்றிய முன்னாள் அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் 93 வது பிறந்தநாள் முன்னிட்டு தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க.சார்பில் மாவட்டக் கழக அலுவலகம் கலைஞர் அறிவாலயத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முரசொலி மாறன் அவர்களின் திருவுருவப்படத்திற்கு தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் மாலை அணிவித்து மலர்தூவி புகழஞ்சலி செலுத்தப் பட்டது. நிகழ்வில் கழக நிர்வாகிகள் அழகு சுந்தரம், ஜீவானந்தம் மஹ்முதா, கதிர், ஆனந்த், வாசுதேவன், அழகு தமிழ் சங்க,சூர்யா சுப்பிரமணி என்ற ஈஸ்வரன், சுப்பிரமணியன், கருப்பணன் சண்முகநாதன், மூப்பன் ஹபீபுர் ரகுமான் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

### சேலம் மத்திய மாவட்டம்

# வழக்கறிஞர் அ.நவமணி மறைவு!

## கழகத்தினர் நேரில் அஞ்சலி!

சேலம், ஆக. 19 -

சேலம் மத்திய மாவட்டத்தின் கழக வழக்கறிஞர் அ. நவமணி (வயது 64 ) வயது மூப்பின் காரணமாக இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்து அன்னாரது உடலுக்கு மாவட்ட மாநகர பகுதி கழக நிர்வாகிகள். மாமன்ற உறுப்பினர்கள் வழக்கறிஞர்கள் மாலை அணிவித்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.



### ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்

# ஜெ.திருவாசகம் தாயார் தேன்மொழி (எ) விஜயா மறைவு!

## கழகத்தினர் நேரில் அஞ்சலி!

ஈரோடு, ஆக. 19 –

ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம் தாயாரும், ஈரோடு தெற்கு மாவட்ட கழக துணை செயலாளர் ஆ.செந்தில்குமார் அண்ணியுமான தேன்மொழி (எ) விஜயா 17.8.2026 திங்கட்கிழமை இரவு தெற்குபள்ளம் லட்சுமி கார்டனிலுள்ள அவரது இல்லத்தில் காலமானார் என்கிற செய்தியை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாருக்கு ஜெயக்குமார் என்ற கணவரும், திருவாசகம், கோவேந்தன் என்கிற இரண்டு மகன்களும் உள்ளனர்.




அன்னாரின் மறைவு செய்தியறிந்த மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர், வார்டு கிளை கழக நிர்வாகிகள் இளைஞரணியினர், சார்பு அணிகளின் நிர்வாகிகள் அனைத்து கட்சி பிரமுகர்கள் பலர் அன்னாரின் உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### விருத்தாசலம் எம். செல்வராஜ்

### ஆகஸ்ட் 19 (1997)



தந்தை பெரியார் தலைமையில் 1944ஆம் ஆண்டு திராவிடர் கழகத்தில் சேர்ந்தார். பின்னர், அண்ணா தலைமையில் தி.மு.க. தொடங்கிய காலம் முதல் தொடர்ந்து தொய்வில்லாமல் கழகப் பணியாற்றியவர்.

தென்னாற்காடு மாவட்டத்தில் கழகத்தை வளர்த்த முன்னோடிகளில் ஒருவராக விளங்கியவர். மாவட்டக் கழகச் செயலாளர், கழக அமைப்புச் செயலாளர், மூன்று முறை தணிக்கைக்குழு உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர். தமிழக சட்டப்பேரவைக்கு மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர். மாநில நிலவள வங்கி தலைவராக பணியாற்றியவர்.

மக்கள் பிரச்சினைக்காக கழகம் நடத்திய பெரும்பாலான போராட்டங்களில் பங்கேற்றவர். விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றவர்.

நெருக்கடிநிலை காலத்தில் மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு காலம் சிறையில் இருந்தவர்.

கழகச் சார்பில் 1996ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைவர் கலைஞர் அவர்கள் ‘பெரியார் விருது’ வழங்கி சிறப்பித்தார்கள்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**